சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்ட அரங்கில் 6.10.2023 அன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் 34 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குனர் ச.அண்ணாதுரை ஆகியோர் உள்ளனர்.

மழைநீர் வடிகால் பணிகள் - சாலைப் பணிகளை

பருவ மழை தொடங்கும் முன் விரைந்து முடித்திடுவீர்!

அணைத்துத் துறை அதிகாரிகளுக்கு தலைமைச் செயலாளர் அறிவுறுத்தல்!

சென்னை, அக். 8 -

அரசு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா தலைமையில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப்பணிகளின் நிலை குறித்தும், சாலை வெட்டுக்களை சீரமைக்கும் பணிகள் குறித்தும், மழைநீர் வடிகால் பணிகள் குறித்தும் மற்றும் சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, கூடுதல் தலைமைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்துறை, முதன்மைச் செயலாளர், உள்துறை, முதன்மைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தமிழ்நாடு காவல் துறை இயக்குநர், சென்னை மாநகர காவல்துறை ஆணையர், முதன்மைச் செயலாளர், சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட், மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், உறுப்பினர் செயலாளர், பெருநகர வளர்ச்சிக் குழுமம், இயக்குநர், பேரிடர் மேலாண்மை, பெருநகர சென்னை மாநகராட்சியின் இணை ஆணையர் (பணிகள்), கூடுதல் மாநகர காவல் ஆணையர் (போக்குவரத்து), மற்றும் வட்டார துணை ஆணையர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பல் வேறு துறைகளின் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலாளர் அவர்கள் மண்டலம் வாரியாக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மூன்றாவது ஆய்வுக் கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் சீரான போக்குவரத்து குறித்தும், நடைபெற்று வரும் சாலைப் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் குறித்தும் ஆய்வு செய்தார்கள்.

இக்கூட்டத்தில், சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலை துறை, சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் ஆகிய துறைகள் மேற்கொண்டு வரும் சாலை வெட்டு சிரமைப்புப்பணி களை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். மேலும், மண்டலம் வாரியாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர், உதவி ஆணையர், போக்குவரத்து காவல் துறை, உதவி செயற் பொறியாளர், நெடுஞ்சாலை துறை, சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் அலுவலர் மற்றும் உதவி செயற் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஆகியோர் கொண்ட குழு அமைத்து கள ஆய்வு செய்து போக்குவரத்து தடையின்றி செல்வதை உறுதிபடுத்த வேண்டும். பணி மேற்கொள்ளும் இடங்களில் தடுப்பரன்கள் (barricading) தக்க வடிவமைப்புடன் மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத்துறை இணைந்து சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் மேற்கொண்டு வரும் தடுப்பரன் போன்று அமைய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்கள். காவல் துறை ஆணையர் அவர்கள் சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கவும் வாகனங்கள் சீராக செல்ல எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் விவரித்தார்கள்.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, தாம்பரம் மற்றும் ஆவடி மாநகராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் சாலைப்பணிகள் குறித்தும் சாலை வெட்டுப்பணிகள் சீரமைப்பு குறித்தும் முதலில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இணை ஆணையர் (பணிகள்), பெருநகர சென்னை மாநகராட்சி 29.09.2023 அன்று நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தலைமைச் செயலாளர் அவர்களுக்கு விவரித்தார்கள்.

சாலை வெட்டுக்களில் உள்ள ஒட்டுப்பணிகளை விரைந்து முடிக்க மண்டல வாரியாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, இறுதி செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது என்றும் தெரிவித்தார்கள். ஒவ்வொரு மண்டலத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கு Micro Plan Schedule தயாரிக்கப்பட்டு அதன்படி பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கே.கே.நகர் அண்ணா பிரதான சாலை, நெடுஞ்செழியன் சாலை, பாடசாலை, மணலி சின்ன சேக்காடு, மாதவரம், முகலிவாக்கம், வளசரவாக்கம், இராமாபுரம், மணப்பாக்கம் மற்றும் மடிப்பாக்கம் பகுதிகளில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் பணிகள் முடிக்கப்பட்ட சாலைகளில் நிரந்தர சாலை வெட்டு சீரமைப்பு பணிகள், தற்காலிக சாலை வெட்டு சீரமைப்பு ப்பணிகளையும் 15.10.2023க்குள் முடிக்கவும் தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

நெடுஞ்சாலைத்துறை, அண்ணா சாலை, ஜி.எஸ்.டி சாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலை, 100 அடி சாலை, மேடவாக்கம் பிரதான சாலை, வேளச்சேரிதாம்பரம் சாலை, மர்மலாங் பாலம் இரும்புலியர் சாலை, வளசரவாக்கம் வள்ளுவர் நகர் சாலை, எருக்கஞ்சேரி சாலை, மேடவாக்கம் மாம்பாக்கம் சாலை, வானகரம் அம்பத்தூர் புழல் சாலை ஆகிய சாலைகளில் மேற்கொண்டு வரும் சாலை வெட்டு மற்றும் சீரமைப்புப்பணிகளை 15.10.2023க்குள் விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

தலைமைச் செயலாளர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள். கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் இதுவரை 82 சதவிகித மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதென்றும் மீதமுள்ள பணிகள் 15.10.2023க்குள் முடிக்கப்படும் என தெரிவித்தார்கள். மண்டலம்4ல் தென்றல் சாலை, மணலி சாலை, எம்.கே.பி. நகர் முதல் பிரதான சாலை, வடக்கு அவென்யூ சாலை ஆகிய சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினை 15.10.2023க்குள் முடிக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். மண்டலம்5ல் இராஜாஜி சாலை, பிரகாசம் சாலை, போலீஸ் கமிஷனர் சாலை ஆகிய சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீதமுள்ள மழைநீர் வடிகால் பணிகளை 15.10.2023க்குள் முடிக்கவும் அறிவுறுத்தினார்கள். மண்டலம்6ல் பெரம்பூர் பேரக்ஸ் சாலை, மேடவாக்கம் டேங்க் சாலை, ஸ்டீபன்சன் சாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணி, Sump Work and Pumping arrangements, Sluice Gate அமைக்கும் பணிகளை 15.10.2023க்குள் முடிக்க அறிவுறுத்தினார்கள். மண்டலம் 7ல் குறிஞ்சி தென்றல் திரு.வி.க தெரு, மண்டலம்8ல் பெரியார் பாதை, மண்டலம் 9ல் R.A.புரம் ஒன்றாவது சாலை, மண்டலம்10ல் அசோக்நகர் 11வது அவென்யூ சாலை, 4வது அவென்யூ சாலை, 54வது தெரு ஆகிய சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினை 15.10.2023க்குள் முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். மண்டலம்11, மண்டலம்12 மற்றும் மண்டலம்13ல் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து மழைநீர் வடிகால் பணிகளையும் 15.10.2023க்குள் முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்ட இடங்களில் Silt Catch Pit அமைக்கும் பணியினையும் 15.10.2023க்குள் முடித்து மழைநீர் சீராக செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

நெடுஞ்சாலைகள் துறை, ஈ.வெ.ரா பெரியார் சாலை, அண்ணா சாலை. இரும்புலியூர் சாலை ஆகிய சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் Silt Catch Pit அமைக்கும் பணிகளை 15.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

நீர்வள ஆதார துறை, பருவ மழை முன்னெச்சரிக்கை ஆயத்தப்பணிகளில் அனை ஏரியிலிருந்து மழைநீர் வெளியேற பல்லாவரம் சுற்று வட்டாரச்சாலை, DLF பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி, தணிகாச்சலம் நீர்வழி கால்வாய், மாதவரம் டேங்க் புணரமைக்கும் பணிகளையும் 15.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். மேலும், செம்பரம்பாக்கம் அனகாபுத்தூர் பகுதி, போருர் ஏரி, போருர் push through culvert, போருர் உபரி நீர் கால்வாய், கொசஸ்தலை ஆற்றின் கரை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். தணிகாச்சலம் கால்வாய், மாதவரம் ரெட்டேரி, கொலப்பாக்கம் கால்வாய்களில் தூர்வாரும் பணிகளையும், வெள்ளத் தடுப்பணை பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

தாம்பரம் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் 13 மழைநீர் வடிகால் பணிகளில் 4 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

ஆவடி மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் 10 மழைநீர் வடிகால் பணிகளில் 3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

நீர்வள ஆதார துறை அனைத்து வெள்ளத் தடுப்பணைகளை வரும் பருவ மழைக்கு முன்னர் சீரமைத்து செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்றும், பருவ மழைக்கு முன் முடிக்க முடியாத மழைநீர் வடிகால் பணிகளை Disposal point லிருந்து பணியினை மேற்கொள்ள வேண்டும் என்றும் அனைத்து துறைகளும் அவர்கள் மேற்கொண்டுவரும் அனைத்து மழைநீர் வடிகால் பணிகளையும் 15.10.2023க்குள் முடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

இறுதியாக அனைத்துத் துறைகளும் சாலைப்பணிகளையும், மழைநீர் வடிகால் பணிகளையும் பருவ மழை தொடங்கும் முன் விரைவாக முடித்து சீரான போக்குவரத்தினை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுரை கூறினார்கள்.

உலகக்கோப்பை கிரிக்கெட்:

இந்தியா - ஆஸ்திரேலியா

அணிகள் இன்று மோதல்!

சென்னை, அக். 8 -

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான போட்டி இன்று சென்னையில் நடைபெறுகிறது. இதற்கான பாதுகாப்பு பணியில் முதல் முறையாக ட்ரோன்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

உலகக் கோப்பை கிரிக்கெட் (50 ஓவர்) போட்டியில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் 5 முறை சாம்பியனான ஆஸ்திரேலியாவை இன்று (அக்.8) சென்னையில் சந்திக்கிறது. சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ சிதம்பரம் மைதானத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும் இப்போட்டியை காண ரசிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர். டிக்கெட்கள் பெரும்பாலும் விற்று தீர்ந்து விட்டன.

கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நாடாளுமன்ற தேர்தல் வரை

திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் விளக்கிட

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக தொடர் பொதுக் கூட்டங்கள்!

மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

தமிழகத்திற்கும் கழகத்திற்கும் கவசமாய் திகழ்ந்து மறைந்தும் - மறையாமல் நம் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி - அவர் தமிழினத்திற்காகவும் - தமிழ்நாட்டு மக்களுக்காவும் ஆற்றிய அரும்பெரும் சாதனைகளை விளக்கியும் -

தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்று மக்கள் மனம் மகிழும் வகையில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி இந்தியாவின் No.1 முதல்வர் என்ற பெருமைமிகு சாதனையை படைத்து, இரண்டரை ஆண்டு ஆட்சியில் எண்ணிலடங்கா திட்டப் பணிகளை நிறைவேற்றி சாதனை படைத்த சரித்திரத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான மக்கள் நலன் காக்கும் கழக அரசின் சாதனைகளை விளக்கியும்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள பகுதி- ஒன்றிய - நகர - பேரூர்களில் மக்கள் கூடும் முக்கிய இடங்களில் வருகிற 21.10.2023, 22.10.2023, 28.10.2023, 29.10.2023 ஆகிய தேதிகளில் சனி, ஞாயிற்று கிழமைகளில் கீழ்க்கண்ட பகுதி- ஒன்றிய - நகர - பேரூர்களில் கீழ்க்காணும் விவரப்படி தொடர் பொதுக் கூட்டங்கள் நடைபெற உள்ளது.

நாள் : 21.10.2023 (சனி) – நேரம்: மாலை 5 மணி

பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்	உரையாற்றும் பேச்சாளர்
காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம்	முனைவர் கோவி.செழியன், எம்.எல்.ஏ.
பல்லாவரம் வடக்கு பகுதி	பவானி கண்ணன்
காட்டாங்களத்தூர் தெற்கு ஒன்றியம்	கரூர் முரளி
திருப்போரூர் வடக்கு ஒன்றியம்	குத்தாலம் அன்பழகன்
செங்கல்பட்டு நகரம்	போடி காமராஜ்
திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம்	தூத்துக்குடி சரத்பாலா
திருக்கழுக்குன்றம் பேரூர்	முனைவர் சபாபதி மோகன்

நாள் : 22.10.2023 (ஞாயிறு) – நேரம்: மாலை 5 மணி

பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்	உரையாற்றும் பேச்சாளர்
மாங்காடு நகரம்	ஈரோடு இறைவன்
பம்மல் தெற்கு பகுதி	முனைவர் சபாபதி மோகன்
திருப்போரூர் பேரூர்	பவானி கண்ணன்
திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம்	தூத்துக்குடி சரத்பாலா
பல்லாவரம் தெற்கு பகுதி	போடி காமராஜ்
புனிததோமையர் மலை வடக்கு ஒன்றியம்	கரூர் முரளி
மறைமலை நகர் நகரம்	குத்தாலம் அன்பழகன்

நாள் : 24.10.2023 (புதன்) – நேரம்: மாலை 5 மணி

பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்	உரையாற்றும் பேச்சாளர்
ஆலந்தூர் தெற்கு பகுதி	சைதை சாதிக்

நாள் : 25.10.2023 (வியாழன்) – நேரம்: மாலை 5 மணி

பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்	உரையாற்றும் பேச்சாளர்
குன்றத்தூர் வடக்கு ஒன்றியம்	முனைவர் கோவி.செழியன், எம்.எல்.ஏ.

நாள் : 26.10.2023 (வெள்ளி) – நேரம்: மாலை 5 மணி

பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்	உரையாற்றும் பேச்சாளர்
ஆலந்தூர் வடக்கு பகுதி	ஈரோடு இறைவன்

நாள் : 28.10.2023 (சனி) – நேரம்: மாலை 5 மணி

பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்	உரையாற்றும் பேச்சாளர்
குன்றத்தூர் நகரம்	குடியாத்தம் புவியரசி
திருப்போரூர் தெற்கு ஒன்றியம்	நாகம்மை கருப்பையா
பம்மல் வடக்கு பகுதி	ஆரணி மாலா
தாம்பரம் கிழக்கு பகுதி	சேலம் சுஜாதா
செம்பாக்கம் வடக்கு பகுதி	கந்திலி கரிகாலன்
நந்திவரம் கூடுவாஞ்சேரி நகரம்	அத்திப்பட்டு சாம்ராஜ்

நாள் : 29.10.2023 (ஞாயிறு) – நேரம்: மாலை 5 மணி

பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்	உரையாற்றும் பேச்சாளர்
செம்பாக்கம் தெற்கு பகுதி	சேலம் சுஜாதா
திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம்	கந்திலி கரிகாலன்
பெருங்களத்தூர் தெற்கு பகுதி	ஆரணி மாலா
குன்றத்தூர் தெற்கு ஒன்றியம்	சைதை சாதிக்
திருப்பெரும்புதூர் பேரூர்	அத்திப்பட்டு சாம்ராஜ்
மாமல்லபுரம் நகரம்	சேப்பாக்கம் பிரபாகரன்

நாள் : 30.10.2023 (திங்கள்) – நேரம்: மாலை 5 மணி

பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்	உரையாற்றும் பேச்சாளர்
கண்டோன்மெண்ட் நகரம்	குடியாத்தம் புவியரசி

அறிவிக்கப்பட்டுள்ள இந்த பொதுக்கூட்டங்களை, அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து, உள்ளூரில் உள்ள கழகப் பேச்சாளர்களையும் இணைத்து, அழைப்பிதழில் கழக நிர்வாகிகளின் பெயர்களை விடுபடாமல் முறையாக துண்டு பிரசுரங்களை அச்சிட்டு,

அந்தந்த மாநகர பகுதி - ஒன்றிய - நகரங்களில் அடங்கிய நகர - பேரூர் - வட்டக் கழக நிர்வாகிகள் - இளைஞர் அணி - மாணவர் அணி - மகளிர் அணி உள்ளிட்ட கழக அணிகளின் நிர்வாகிகள் - வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் - உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் கழக செயல் வீரர்கள் அனைவருக்கும் முறையாக தகவல் தந்து அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து,

எந்த நோக்கத்திற்காக இந்த தொடர் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளதோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றிடும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் அன்புத் தலைவர் தளபதி அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள ஏழை - எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட அடித்தட்டு மக்களுக்காக அவர்கள் ஆட்சியின் போது ஆற்றிய அரும் பெரும் சாதனைகளை மக்களிடம் கொண்டு சென்று சேர்த்திட, இப்பொதுக்கூட்டங்களை ஆடம்பரமின்றி - மிகவும் எளிமையான முறையில் - எழுச்சியுடன் நடத்திடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன்
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி – தாம்பரம் மாநகரம் பல்லாவரம் தெற்கு பகுதி 24 வது வட்ட தி.மு.க. சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஒட்டி திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி பொதுக்கூட்டம் வட்டக் கழக செயலாளர் ஆர். கே. நாகராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகப் பேச்சாளர் கரூர் முரளி கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். மாவட்ட கழகத் துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, மண்டல தலைவர் பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை, பல்லாவரம் தெற்கு பகுதி செயலாளர் இ. எஸ். பொன்னார்ட், பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

அண்ணாநகர்

விக்னேஷ் சந்திரன் இல்ல விழா!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - நே.சிற்றரசு - தயாநிதிமாறன் வாழ்த்து!

சென்னை, அக். 8 -

அண்ணா நகர் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணியின் ஒருங்கிணைப்பாளர் விக்னேஷ் சந்திரன் குழந்தை திக்கஷீதா சந்திரன் முதலாம் ஆண்டு பிறந்தநாள் விழா இன்று (8.10.2023) தலைமை ச.பரமசிவம் (அண்ணா நகர் வடக்கு பகுதி செயலாளர்) சி பி திருமலை மற்றும் க.கோவிந்தராஜ் முன்னிலையில் ஆவின் சந்திரன் வரவேற்பில் இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் எம். கே. மோகன், கலாநிதி வீராசாமி எம்.பி., அண்ணா நகர் தெற்கு பகுதி செயலாளர் ந.இராமலிங்கம், தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணை செயலாளர் கார்த்திக் மோகன், சி. ஏச் சேகர், ஏவி , ஆர் கோபால் ராம், பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டகழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் வாழ்த்துகின்றனர்.

தகவல் தொழில்நுட்ப அணியின் சென்னை மேற்கு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் முரசொலி ஜெயக்குமரன் மற்றும் பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ரமேஷ் இளையராஜா ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

141 அ வட்டத்தில்

பாக முகவர்கள் - வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ., - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., - கே.ஏழுமலை - ராஜா அன்பழகன் பங்கேற்பு!

சென்னை, அக்.8-

141 அ வட்ட கிளையில் சி.ஐ.டி. நகர் செங்கண்ணியம்மன் ஆலயம் எதிரில் உள்ள இராஜாஜி சேவா சங்க கட்டிடத்தில் இன்று (8.10.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணிக்கு பாக முகவர்கள் (BLA2) மற்றும் வாக்குசாவடி முகவர்கள் (BLC) ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

நிகழ்ச்சி நோக்கம் BLC உறுப்பினர்கள் ஆய்வு கூட்டம் மற்றும் கழக ஆக்க பூர்வ பணிகள் பற்றிய ஆலோசனை.

இந்த ஆலோசனை கூட்டத்தில் சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி மறைந்த கழக செயற்குழு உறுப்பினர் என்.மோகன் திருவுருவப்படத்தை திறந்து வைத்து அன்னாரது குடும்பதிற்கு கிளை கழகம் சார்பில் நிதி வழங்குகிறார்.

இதில் பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, 141வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜா அன்பழகன் கலந்து சிறப்பிக்கின்றனர்.

எனவே கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துனண அமைப்பாளர்கள் அனைவரும் திரளாக கலந்து சிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு 141அ வட்ட கிளை கழக செயலாளர் கிளை எஸ். லட்சுமி காந்தன் தெரிவித்துள்ளார்.